### தமிழ்நாடு முதலமைச்சரின் கனவுத் திட்டமான

# ‘வட சென்னை வளர்ச்சி திட்டம்’ குறித்து ஆய்வு!

### தலைமைச் செயலகத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.4-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான “வடசென்னை வளர்ச்சி திட்டம்” குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழி காட்டுதலின்படி நேற்று (03.11.2023) சென்னை தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2023-2024 ஆம் ஆண்டு அறிவித்த திட்டமான ரூ.1000 கோடி மதிப்பீட்டில் “வடசென்னை வளர்ச்சித் திட்டம்” குறித்து சம்மந்தப்பட்ட துறை அரசு செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவு திட்டமான “வடசென்னை வளர்ச்சி திட்டம்” குறித்து இன்று சம்பந்தப்பட்ட துறை சார்ந்த செயலாளர்கள் மற்றும் உயர் அவர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் வடசென்னை பகுதிகளில் ஏற்பட்டு வரும் உட்கட்டமைப்பு குறைபாடுகளான கழிவு நீர் அடைப்பு, குடிநீரில் கழிவு நீர் கலப்பது போன்றவற்றை சீரான முறையில் மேம்படுத்துவதும், நல்ல உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி, பூங்காக்கள் பராமரிப்பு, உடற்பயிற்சி கூடங்கள் பராமரிப்பு, மயான பூமிகள் பராமரிப்பு, பள்ளிகள் கட்டமைப்பு மேம்பாடு, கல்லூரிகளில் கட்டமைப்பு மேம்பாடு, தடையில்லா மின்சாரம் வழங்குவது, மழைநீர் கால்வாய் பணிகள், புறநகர் மருத்துவமனைகளை தரம் உயர்த்துவது. அதேபோல் காசிமேடு மற்றும் திருவொற்றியூர் பகுதியை சேர்ந்த மீனவர் பகுதியில் வாழ்கின்ற மக்களுடைய வாழ்வாதாரம் மீன்பிடி தொழிலைச் சார்ந்த அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குதல் போன்றவை குறித்தும். ஆரம்ப சுகாதார நிலையங்கள், மகப்பேறு மருத்துவமனை அமைப்பது. குறிப்பாக போதை பழக்கத்தில் இருந்து மீள்வதற்கான மறுவாழ்வு மையம் (Rehabilitation Centre) அமைத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு மருத்துவமனை உருவாக்குதல், டயாலிசிஸ் சென்டர் அமைத்தல் போன்றவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உள், மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.பெ. அமுதா, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர். தா.கார்த்திகேயன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, பெருநகர சென்னை காவல் கூடுதல் ஆணையர்கள் (போக்குவரத்து) ர.சுதாகர், (வடக்கு) ஆஸ்ரா கர்க் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கம் பகுதியில் நேற்று (03.11.2023) அமையப்பெற்றுள்ள தந்தை பெரியார் நினைவகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.8.14 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் நினைவகம் மற்றும் நூலக கட்டிடப் பணிகளின் ஆய்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தந்தை பெரியாரின் திருவுருவச்சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். அருகில் செய்தித் துறை இயக்குநர் த.மோகன் பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் எஸ்.ரமேஷ்குமார், தமிழ்நாடு அரசின் கேரள மாநில தொடர்பு அலுவலர் ஆர்.உண்ணிகிருஷ்னன் ஆகியோர் உள்ளனர்.

### தலைமைத் தீர்மானக்குழு சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா –

# நூல்கள் வழங்கும் நிகழ்ச்சி! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாப் பேருரை!

### தலைமை: கவிஞர் தமிழ்தாசன்! அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு - மா.சுப்பிரமணியன் - கழக முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, நவ.4-

கழக தலைமைத் தீர்மானக்குழு சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா - நூல்கள் வழங்கும் நிகழ்ச்சி நாளை (5-11-2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு தீர்மானக் குழுச் செயலாளர்கள் மீ.அ.வைத்தியலிங்கம், கீரை எம்.எஸ். விசுவநாதன், அக்ரி கே.பி.டி. கணேசன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமை வகிக்கிறார்.

தீர்மானக்குழு துணைத் தலைவர்கள் டாக்டர் இரா.மாசிலாமணி, பார். இளங்கோவன், சுப.த.திவாகரன், தீர்மானக்குழு இணைச் செயலாளர்கள் மு.முத்துசாமி, பி.நரசிம்மூர்த்தி, வ. சத்தியமூர்த்தி, எம்.ஜெயக்குமார், தீர்மானக்குழு உறுப்பினர்கள் க.வேங்கடபதி, சு.தங்கவேல், மிசா சி.ராமநாதன், ஆர்.சேது நாதன், ஆதி. சங்கர், டி.டி. ரெஜினால்ட், எம்.வி. வெற்றிச்செல்வன், ப.ஆ. சரவணன், மு.இரா. செல்வராஜ், ஆ.நாச்சிமுத்து, எம்.வீரகோபால், என்.வி. காமராஜ், ப.நீலகண்டன், ஜி.ஏ.அதிபதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு நூல்கள் வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

மேலும் இவ்விழாவில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தயாநிதி மாறன் எம்.பி., தலைமைக் கழகச் செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மேயர் பிரியா ராஜன், துணை மேயர் சைதை மு.மகேஷ் குமார், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா நன்றி கூறுகிறார்.

### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில்

# கிழக்கு வானின் சுடரே - கேள்வியும் பதிலும் அவரே - வினாடி வினா!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் - ஹெலன் டேவிட்சன் - அ.வெற்றி அழகன் பங்கேற்பு!

சென்னை, நவ.4-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் உடன் பிறப்புகள் கொண்டாடும் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிழக்கு வானின் சுடரே - கேள்வியும் பதிலும் அவரே எனும் தலைப்பில் மாணவ-மாணவிகளுக்கு வினாடி வினா நிகழ்ச்சி 6-11-2023 - திங்கள்கிழமை காலை 9.00 மணியளவில் வில்லிவாக்கம் டி.கே.ஏ. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் கலந்துகொண்டு மாணவ-மாணவிகளுக்கான வினாடி-வினா போட்டியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், வி.கௌதமன்,

கூ.பி.ஜெயின் எம்.சி., வே.வாசு, சரிதா மகேஷ் குமார் எம்.சி., புனிதவதி எத்திராசன் எம்.சி., சாவித்திரி வீரராகவன் எம்.சி., டி.வி. செம்மொழி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., ராஜேஷ்வரி ஸ்ரீதர் எம்.சி., வி.ஜி.நாகவள்ளி எம்.சி., வானவில் விஜய், லதா வாசு எம்.சி., ம.கலைச்செல்வி, டபுள்யு அமுல், பா.மணிக்கொடி, சாந்தி பில்லி, கே.ஸ்நோபா, ஜெ.தேவகிருபை, கே. சாரதா எம்.சி., எஸ்.விஜயலட்சுமி, பி.ஜெயந்தி, அனுசுயா பாண்டுரங்கன், பிரேமா தயாளன், கே.கிருஷ்ண வேணி, ஆர். இருதயமேரி.

கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், சி.மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி எம்.சி., வழக்கறிஞர் இந்திரஜித், ஆர்.வரதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக ஆர்.தீனதயாளன் நன்றி கூறுகிறார்.

### ஜார்கண்ட் மருத்துவக் கல்லூரியில்

# கொலையுண்ட நாமக்கல் மாணவர் உடல் சென்னை வருகை!

### அமைச்சர் மா.மதிவேந்தன் - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. ஏற்பாடு!

நாமக்கல் நவ 4 -

நாமக்கல் மாவட்டம், வேலகவுண்டம்பட்டியை சேர்ந்த மாணவர், ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரியில் எரித்துக் கொலை செய்யப்பட்டார்.

நாமக்கல் மாவட்டம், வேலகவுண்டன்பட்டியை சேர்ந்தவர் மதியழகன், ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். இவரது மகன் மதன்குமார், இவர் எம்.பி.பி.எஸ். முடித்து விட்டு, நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று, ஜார்கண்ட் மாநிலம், ராஞ்சி நகரில் உள்ள, புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரியில் முதுநிலை மருத்துவப் படிப்பு இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார்.

இந்த நிலையில் கடந்த 2 நாட்கள் முன்பு அவர் திடீரென்று கல்லூரி விடுதியில் இருந்து காணாமல் போய்விட்டார். அடுத்த நாள் அதே பகுதியில், கல்லூரி விடுதி வளாகத்தில், பாதி எரிந்த நிலையில் மாணவர் மதன் குமார் உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அவரது உடலை கைப்பற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். அவரது கொலைக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை.

இது குறித்து தகவல் கிடைத்ததும், வேலகவுண்டம்பட்டியில் இருந்து அவரது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் ஜார்கண்ட் புறப்பட்டு சென்றுள்ளனர்.

ஜார்கண்ட்டில் கொலை செய்யப்பட மருத்துவ மாணவரின் உடல் விமானம் மூலம் விமானம் மூலம் கொண்டு வரப்படுகிறது. இன்று நாமக்கல்லில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகிறது.

இது குறித்து நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச..உமா வெளியிட்ட தகவல் வருமாறு:

நாமக்கல் மாவட்டம் வேலகவுண்டம்பட்டியை சேர்ந்த மருத்துவக் கல்லூரி மாணவர் மதன்குமார், ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி விடுதியில் கொலை செய்யப்பட்டு இறந்த தகவல் கிடைத்ததும், நாமக்கல் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவரது குடும்பத்தினருக்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் ஆகியோர் மூலம், ஜார்க்கண்ட் மாநில போலீஸ் டி.ஐ.ஜி. மற்றும் ராஞ்சி மாவட்ட ஆட்சியர் ஆகியோரை தொடர்பு கொண்டு, மாணவர் உடலை, விமானம் மூலம் சென்னை கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்திற்கு, நாமக்கல்லில் இருந்து மார்ச்சுவரி வேன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து அவரது உடல் கொண்டு வரப்பட்டு, இன்று (நவ 4 ஆம் தேதி) காலை, நாமக்கல் நகராட்சி மின் மயானத்தில் அவரது இறுதிச் சடங்கு நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் ச. உமா தெரிவித்துள்ளார்.

### சுற்றுலாத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும்

# திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர் கா.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.4-

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நேற்று (3.11.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மை செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா, ஆகியோர் முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா கொள்கையை (26.9.2023) அன்று வெளியிட்டார். தமிழ்நாடு சுற்றுலா கொள்கையில், தமிழ்நாட்டின் வருடாந்திர மாநில மொத்த உற்பத்தியில் குறைந்தது 12 சதவீதம் சுற்றுலாத்துறை பங்களிப்பு அளிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சுற்றுலா மற்றும் அதன் துணைத் தொழில்கள் மூலம் தமிழகத்தில் 25 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். சுற்றுலாத்துறையில் ரூ.20,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சுற்றுலா மற்றும் அதன் துணைத் தொழில்களில் ஈடுபட்டு வரும் 3 லட்சம் தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்படும்.

மேலும் சுற்றுலாத்துறையின் முதலீடு செய்யும் தொழில்முனைவோருக்கு உதவும் வகையில் ஊக்கத் தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வகை A திட்டப்பணிகள் (ரூ.50 கோடி வரையிலான முதலீட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்) மேற்கொள்ள 25% அதிகபட்சமாக ரூ.1.50 கோடி வரை மூலதன மானியம் வழங்கப்படும். பெண்கள் / எஸ்சி / எஸ்டி / திருநங்கைகள் / மாற்றுத்திறனாளி (திவ்யாங்) நபர்களால் ஊக்குவிக்கப்படும் திட்டங்களுக்கு 5% அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை கூடுதல் மூலதன மானியம் வழங்கப்படும்.

நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கு 5% அதிகபட்சமாக ரூ.25 லட்சம் வரை கூடுதல் மூலதன மானியம் வழங்கப்படும். குறு நிறுவனங்களுக்கு 10% அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை கூடுதல் மூலதன மானியம் வழங்கப்படும். 20 நபர்களுக்கு மேல் வேலை வழங்கும் நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு ஊதிய ஊக்கத்தொகை ஆண்டொன்றுக்கு ரூ.24,000 வீதம் ஒரு பணியாளருக்கு 3 ஆண்டுகள் வரை வழங்கப்படும். குறு/சிறு நிறுவன, புதிய மற்றும் விரிவாக்க சுற்றுலாத் திட்டங்களுக்கான வட்டி மானியத்தை திரும்ப பெறுவதற்கும், தேசிய மற்றும் பன்னாட்டு தரச்சான்றிதழ்கள் பெறுவதற்கான மானியமும் வழங்கப்படும்.

வகை B திட்டப்பணிகள் (ரூ.50 கோடி முதல் 200 கோடி வரையிலான முதலீட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்) மேற்கொள்ள 5% அதிகபட்சமாக ரூ. 3 கோடி வரை மூலதன மானியம் வழங்கப்படும். 20 பேருக்கு மேல் வேலை வழங்கும் நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு ஊதிய ஊக்கத்தொகை ஆண்டொன்றுக்கு ரூ.24,000 வீதம் ஒரு பணியாளருக்கு 3 ஆண்டுகள் வரை வழங்கப்படும்.

தேசிய தரச்சான்றிதழ்கள் பெறுவதற்கு ரூ.2 இலட்சம் வரையிலான மானியமும், பன்னாட்டு தரச்சான்றிதழ்கள் பெறுவதற்கு ரூ.10 இலட்சம் வரையிலும் மானியம் வழங்கப்படும். நிறுவனங்களில் பசுமை முன் முயற்சி திட்டங்களுக்கான ஊக்கத்தொகையாக 25 சதவீதம், அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படும்.

வகை C திட்டப்பணிகள் (ரூ.200 கோடிக்கு மேலான முதலீட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்) மேற்கொள்பவர்களுக்கு நிறுவனங்களின் திட்டங்கள் அடிப்படையில் கட்டமைப்பு ஊக்கத்தொகை வழங்கப்படும். முக்கிய சுற்றுலாத்தலங்களில் புதிய விடுதிகளுக்கு வணிக மின் கட்டணம் மற்றும் நிறுவன மின் கட்டண வித்தியாச தொகை முதலீட்டுத் தொகையில் 10% வரை அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு திரும்ப வழங்கப்படும். ரூ.200 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்பட்டுள்ள மற்றும் குறைந்தபட்சம் 50 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் புதிய திட்டங்களுக்கு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்திய சான்றிதழ் ஆய்வு அடிப்படையில், மின் பயன்பாட்டில் கட்டணச் சலுகைகள் அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு திரும்ப வழங்கப்படும் என்பது உள்பட பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே சுற்றுலாத்துறையைச் சேர்ந்த அனைத்து அலுவலர்களும் தங்கள் மாவட்டங்களில் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டு வருபவர்களிடம் தமிழ்நாடு சுற்றுலா கொள்கை விவரங்களை தெரிவித்து, அதனை நிறைவேற்றும் பணியில் அர்ப்பணிப்பு உணர்வுடன் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும்.

தங்கள் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் பணியாற்றிட வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா உள்பட சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகர இளைஞரணி சார்பில் நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி பகுதி கழகச் செயலாளர் ஜி.நாராயண பிரசாத் முன்னிலையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் மாநகரக் கழக இளைஞரணி அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத் ஆகியோர் ஏற்பாட்டில் ஆவடி வடக்கு பகுதிகுட்பட்ட ஆவடி பேருந்து நிலையம் அருகில் முன்னாள் அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பேருந்து பயனாளிகளிடம் நீட் தேர்வை எதிர்த்து கையெழுத்து பெறப்பட்டது. அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமிநாராயணபிரசாந்த் மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மாவட்ட மாணவர் மருத்துவ அமைப்பாளர்கள் வி.தியாகராஜன், க.ராஜேஷ் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அக்னி ராஜேஷ், வட்டக் கழக செயலாளர் ஜெயந்தன் ஆவடி மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இள.ஸ்ரீதர், முஸ்தபா அஃப்ரிடி, சதீஷ், புவனேஷ், மகேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### பிற்படுத்தப்பட்டோர்-மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - சீர்மரபினரின்

# 129 விடுதிகள் பராமரிப்பு - பழுது பார்க்கும் பணிகள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு!

சென்னை, நவ.4-

கல்வியே வளர்ச்சியின் முதுகெலும்பு. அனைவருக்கும் கல்வியை உறுதி செய்வதற்காக, குறிப்பாக சமூகத்தின் பின் தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்காக விடுதிகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடத்திற்கான வசதியை வழங்குவது மட்டுமல்லாமல் அவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலை விடுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளின் பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விடுதிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தினை கருத்தில் கொண்டு விடுதிகளில் சிறப்பு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள சிறப்பு நிதி ஒதுக்கீடு அவ்வப்போது அரசால் வழங்கப்படுகிறது. அதன்படி 2023-24 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள ரூபாய் 20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மேற்படி அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக 34 மாவட்டங்களில் 63 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் மற்றும் 66 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகள் என மொத்தம் 129 விடுதிகளுக்கு ரூபாய் 20.00 கோடி மதிப்பீட்டில் சிறப்புப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் விடுதிகளில் மின்சார பராமரிப்புப் பணிகள், விடுதி கட்டடங்களில் பழுது நீக்குதல், கதவு ஜன்னல்கள் சீரமைத்தல் போன்ற பணிகள் பொதுப் பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படும்.

மாவட்டங்களில் விடுதிகளில் பழுதுபார்ப்புப் பணிகள், பராமரிப்புப் பணிகளை ஆய்வு செய்து துரிதப்படுத்திடவும் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



ஒட்டுமொத்த தமிழ்நாடே நிராகரிக்கும் நீட் என்னும் அநீதியை ஒழிக்க, அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுக்கும் மாபெரும் கையெழுத்து இயக்கம், விருகம்பாக்கம் பச்சையம்மன் கோவில் தெரு பகுதியில் நீட் தேர்வுக்கு எதிரான தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்தும் வகையில் பொதுமக்களிடம் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா கையெழுத்து பெற்றார். இந்நிகழ்வில் பகுதிச் செயலாளர் மு.ராசா எம்.சி, வட்டக் கழகச் செயலாளர்கள் மு.கோவிந்தராஜ், வீ.ஏ.ராஜா, மைக்கில், பழக்கடை பாஸ்கர், பகுதி துணை செயலாளர்கள் ச. நாகராஜ், வாட்டர் விஜயகுமார் (ம) ரஞ்சித்குமார் உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் பலர் உடன் இருந்தனர்.